**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை (இணையம் மூலமானது), ஆண்டு III – 2021**

# நியதிச் சட்டங்களினதும் மற்றும் ஆவணங்களினதும் பொருள்கோடல் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

பக்கங்களின் மொத்த எண்ணிக்கை: **08**

எவையேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. ‘‘நீதிபதிகள் சொற்களைப் பொருள்கோடல் செய்கின்றனர். சொற்கள் பொருள்கோடல் செய்பவர்களைப் பிணிக்காது மாறாக பொருள்கோடல் செய்பவர்கள் சொற்களுக்கு அர்த்தத்தினைக் கொடுக்கின்றனர். சொற்களினுடைய அர்த்தம் என்பது வரைஞர்களுடைய ‘எண்ணம்’ என்பதனை’ ஒத்தது அல்ல. அனேகமான சந்தர்ப்பங்களில் வரைஞர்கள் பொருத்தமான எண்ணத்தினையோ அல்லது பல்வேறுபட்ட எண்ணங்களையோ கொண்டிருந்ததில்லை. சொற்களானவை வெறுமனே ஏனையவர்களுக்கு கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான கருவிகள் என்பதனால் அவர்கள் ஓர் எண்ணத்தினைக் கொண்டிருக்கும் பொழுதும் அது கட்டுப்படுத்தாது. விமர்சிக்கும் நபர்கள் சொற்களைப் பயன்படுத்துபவர்களே தவிர வரைஞர்கள் அல்ல.’’

Frank H. Easterbrook, ‘Legal Interpretation and the Power of the Judiciary’ (1987) 7 Harvard Journal of Law and Public Policy 87

இரண்டு பொருள்கோடல் கோட்பாடுகளின் ஏற்புடைமையினை மேற்போந்த கூற்றின் பின்னணியில் ஒப்பிட்டு வேறுபடுத்துக. உமது விடையானது வேறு இரு நியாயாதிக்கங்களிலிருந்தான தீர்ப்புச் சட்ட அதிகாரங்களினால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(100 புள்ளிகள்)

2. சிந்தார் எனும் நாட்டில் சிலு என்கின்ற ஓர் சிறுபான்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் அவர்களுடைய வருடாந்த விழாவினைக் கொண்டாடுவதற்காக கடற்கரையில் ஒன்று கூடினர்.

சிந்தார் நாட்டினுடைய பெரும்பான்மையினரைச் சேர்ந்தவனும் கடற்கரைப் பகுதியில் வசித்து வருபவனுமான கிசு என்பவன் சில மணித்தியாலங்களாக இவ் விழாவினைப் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் அவன் சிந்தார் நாட்டினுடைய பெரும்பான்மையினரைப் போற்றுகின்றதான பிரபல்யமான பாடலொன்றினை வானொலியில் அதிக சத்தத்துடன் ஒலிக்கச் செய்ததுடன் அவ் ஒன்று கூடலுக்கு வந்திருப்பவர்களுக்குத் தெரியும் விதமாக அவனது தோட்டத்தில் மிகப்பெரிய கறுப்பு நிறக் கொடியொன்றினை ஏற்றினான்.

சிலு சமூகத்தின் தலைவரினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து பொலிஸார் கிசுவினைக் கைது செய்ததுடன் 2008 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொது சமாதானத்தைப் பேணுவதற்கான சட்டத்தின் (Public Peace Preservation Act) கீழ் அவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அவன் தன்னுடைய இடத்தை விட்டுத் தான் வெளியில் செல்லவோ அல்லது எந்தவொரு துஷ்பிரயோகமான அல்லது அவமதிக்கின்றதான வாரத்தைகளையோ பயன்படுத்தவோ இல்லை என்பதனால் குறித்த இச் சட்டத்தின் கீழ் அவன் எந்தவொரு குற்றமும் இழைக்கவில்லை எனக் கிசு கோருகின்றான்.

குறித்த சட்டத்தின் நீள் தலைப்பு குறிப்பிடுவதாவது, ”அவசரகால நிலைமைகளின் போது பொது சமாதானத்தைச் பராமரிப்பதற்கும் அத்துடன், அல்லது மறுசீரமைப்பதற்கும் மற்றும் ஏனைய நோக்கங்களுக்குமான மேலும் சிறப்பான ஏற்பாடுகளை வழங்கும் ஓர் சட்டமாகும்.’’

இச் சட்டத்தின் பிரிவு 10 பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது, ‘‘ஏதேனும் பொது இடத்தில் அல்லது ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமாதானம் மீறப்படுவதைத் தூண்டும் எண்ணத்துடன் அல்லது அதன் மூலமாக சமாதானம் மீறப்படக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தலான, துஷ்பிரயோகமான அல்லது அவமதிக்கின்றதான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்ற அல்லது நடத்தைகளை மேற்கொள்ளுகின்ற எவரேனும் ஆளொருவர் இச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றிற்கு பொறுப்பாதல் வேண்டும்.’’

இச் சட்டத்தின் பிரிவு 3 ஆனது ‘பொதுக் கூட்டம்’ என்பது ‘‘பொது இடமொன்றில் நடைபெறுகின்ற ஏதேனுமொரு கூட்டம் மற்றும் பொதுமக்கள் அல்லது அவர்களில் ஏதேனுமொரு பகுதியினர் கொடுப்பனவைச் செலுத்தி அல்லது வேறுவகையில் பங்குபெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதான ஏதேனுமொரு கூட்டம் (எந்த இடத்தில் இடம்பெற்றதென்பதைக் கருத்திற் கொள்ளாது) என்பதுடன் ‘பொது இடம்’ என்பது ‘பொதுமக்கள் அல்லது அவர்களில் ஏதேனுமொரு பகுதியினர் கொடுப்பனவைச் செலுத்தி அல்லது வேறுவகையில் அணுகுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதான ஏதேனுமொரு நெடுஞ்சாலை, பொதுப் பூங்கா அல்லது தோட்டம், ஏதேனுமொரு பொதுப் பாலம், சாலை, வீதி, நடை பாதை, சதுக்கம், முற்றம், ஒழுங்கை அல்லது பாதை’ என விவரிக்கிறது.

சிந்தார் நாட்டினுடைய சட்ட முறைமையானது இலங்கையினதை ஒத்தது எனவும் நீர் இவ் வழக்கினை விசாரிக்கும் ஓர் நீதிபதி எனவும் கருதிக்கொண்டு தீர்ப்பொன்றினை வரைக. உமது தீர்ப்பானது மேற்போந்த நிகழ்வுகளுக்கு பொருத்தமான நியதிச் சட்டத்தினை பொருள்கோடல் செய்வதற்கு நீர் ஏற்புடைமை செய்கின்ற மிகவும் பொருத்தமான

பொருள்கோடலுக்கான விதிகள் மற்றும் அகவய உதவிகள் என்பவற்றைச் சுட்டிக்காட்டல் வேண்டும். உமது விடையினை பொருத்தமான அதிகாரங்களினால் ஆதாரப்படுத்துக.

(100 புள்ளிகள்)

3. அரசியலமைப்பொன்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதான அடிப்படை உரிமைகளானவை ஓர் ஒடுக்கமான அர்த்தத்தில் அல்லாது ஜனநாயக சமூகமொன்றின் மாறுபடும் நிலைமைகள், பெறுமானங்கள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றையும் அத்துடன் வளர்ந்துவரும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் என்பவற்றையும் கருத்திற் கொண்டு தாராளமான அர்த்தத்தில் பொருள்கோடல் செய்யப்படல் வேண்டும். அவ்வவாறு செய்கையில், சில சொல்லப்படாத உரிமைகளும் வெளிப்படையாக உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளவற்றுள் உள்ளடக்கி பொருள்கோடல் செய்யப்பட முடியும்.

அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பொருள்கோடல் செய்கையில் இலங்கை நீதிபதிகளினால் கைக்கொள்ளப்பட்டுள்ளதான அரசியலமைப்புப் பொருள்கோடல் அணுகுமுறைகளின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை நுணுக்கமாக ஆராய்க. நீர் இலங்கை நீதித்துறையின் அணுகுமுறைகளை உமது விருப்பிலான வேறொரு நியாயாதிக்கத்துடன் ஒப்பிடுதல் வேண்டும்.

(100 புள்ளிகள்)

4. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் **இரண்டிற்கும்** விடையளிக்க.

(அ) விவேகத்துடன் பயன்படுத்தப்படின் பொருள்கோடல் மூதுரைகளானவை போட்டிகரமான பொருள்கோடல் சாத்தியப்பாடுகளைக் கண்டறிய உதவும். இருப்பினும், இவை சட்டவாக்குனர்களின் எண்ணத்தை விஞ்சுவதற்கு பொருள்கோடல் செய்பவர்களை இட்டுச் செல்லும் 'ஆபத்தான எஜமான்களாகவும்' இருக்க முடியும். அதனால், முதுரைகளினை எச்சரிக்கையுடன் அணுகுதல் வேண்டும்.

உமது விருப்பிலான தீர்ப்பொன்றினைத் தெரிவு செய்வதுடன் பொருள்கோடலில் மூதுரை ஒன்று பயன்படுத்தப்பட்டமை அல்லது பயன்படுத்தப்படாமை மூலம் ஏற்பட்டிருக்கக்கூடியதான குறைபாடுகள் மற்றும் நன்மைகள் தொடர்பில் மேற்போந்த கூற்றின் பின்னணியில் ஆராய்க.

(50 புள்ளிகள்)

(ஆ) 'ரோஸ்' எனும் பொதுப் பூங்காவானது கயர் எனும் பிரதேசத்தின் உள்ளூரதிகார சபையினால் கட்டுப்படுத்தப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. போட்டிகரமான ஓர் கேள்விப்பத்திர செயல்முறையைத் தொடர்ந்து, கயர் பிரதேசத்தின் உள்ளூரதிகார சபையானது Little star Pre-Schools Private Limited Company என்பதற்கு குறித்த இவ் இடப்பரப்பினில் பாலர் பள்ளியொன்றை நடாத்துவதற்கு இவ் இடப்பரப்பினைக் குத்தகைக்கு

வழங்குவதற்குத் தீர்மானித்தது. போட்டிகரமான கேள்விப்பத்திரமொன்றைச் சமர்ப்பித்த டொரத்தி சில்வா என்பவர் Public Lands Act 1971 இன் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கான உள்ளூரதிகார சபையின் தீர்மானத்தினைச் சவாலுக்குட்படுத்தினார்.

Public Lands Act 1971 இன் பிரிவு 7 ஆனது குறித்த உள்ளூரதிகார சபைகளால் நிர்வகிக்கப்பட்டு மற்றும் கட்டுப்படுத்தப்பட்டு வரும் எந்தவொரு திறந்த வெளியையும் அவ் அதிகார சபை குத்தகைக்கு விடுவதற்கான அதிகாரத்தை வழங்குகிறது. அது பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது:

''ஓர் உள்ளூரதிகார சபையானது அவ் உள்ளூரதிகார சபைக்குச் சொந்தமான எந்தவொரு திறந்தவெளிப் பகுதியையும் சமூகம் சார்ந்த கலாச்சார மையங்கள், விளையாட்டு சங்கங்கள் அல்லது பொழுதுபோக்கு, சமூகம் அல்லது கல்வித் தன்மையுடைய நோக்கங்களை அல்லது செயற்பாடுகளை முழுவதுமாக அல்லது பிரதானமாகக் கொண்டதான வேறு ஏதேனும் தாபனங்களுக்கு குத்தகைக்கு விடலாம்.''

'திறந்த வெளி' என்பது Public Lands Act 1971 இன் பிரிவு 6 இல் "உள்ளூரதிகார சபையொன்றினுடைய கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தின் கீழுள்ள ஏதேனும் பொதுப் பூங்கா, களியாட்ட மைதானம், தோட்டம், மயானம்'' என்பவற்றை உள்ளடக்குவதாக விவரிக்கப்பட்டுள்ளது.

கயர் பிரதேசத்தின் உள்ளூரதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களானவை ரோஸ் பொதுப் பூங்காவினை Little star Pre-Schools Private Limited Company க்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அனுமதிக்கவில்லை என டொரத்தி சில்வா வாதிடுகின்றார்.

இவ் வழக்கின் நீதிபதி என உம்மைக் கருதுக. பொருள்கோடல் மூதுரைகள் மற்றும் பொருத்தமான தீர்ப்புச் சட்டம் என்பவற்றை ஆதாரங்காட்டி உமது தீர்ப்பினை வரைக.

(50 புள்ளிகள்)

5. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் **<u>இரண்டிற்கும்</u>** விடையளிக்க.

(அ) வரலாற்று ரீதியாக, நியதிச்சட்டப் பொருள்கோடலானது சொற்பொருள் அணுகுமுறையொன்றினை ஏற்புடைமை செய்வதன் மூலம் அர்த்தமொன்றைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானமொன்றாகக் கருதப்பட்டது என்பதுடன் தற்போது அது நீதிபதிகளின் கைகளில் தெரிவுகளுக்கான சுதந்திரத்தை அனுமதிக்கும் ஓர் கலையாகக் கருதப்படுகிறது. எனவே, சட்டம் மற்றும் சமூகத்தினுடைய முன்னேற்றத்திற்காக நியதிச்சட்டமொன்றை நீதிமன்றங்கள் பொருள்கோடல் செய்கையில் பின்னணிசார்ந்த ஓர் அணுகுமுறையினூடாக புறவய உதவிகளினைப் பயன்படுத்தும் ஓர் போக்கானது அதற்கெதிரான விமர்சனங்கள் இருந்தாலும் காணப்படுகின்றது.

மேற்போந்த கூற்றில் குறிப்பிடப்பட்டவாறாக ‘சட்டம் மற்றும் சமூகத்தினுடைய முன்னேற்றத்திற்காக’ நியதிச் சட்டப் பொருள்கோடலில் புறவய உதவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதான தீர்ப்புக்களைத் தெரிவு செய்வதுடன் அதன் விளைவுகளை நுணுக்கமாக மதிப்பிடுக. உமது ஆய்வானது இரு புறவய உதவிகளின் பயன்பாட்டினை எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(50 புள்ளிகள்)

(ஆ) ஊழலை இல்லாதொழித்தல் மற்றும் நல்லாட்சியை ஊக்குவித்தலுக்கான சர்வதேச சமவாயத்தில் (ICECPGG) கையொப்பமிட்டதன் பின்னர் உடோப்பியா எனும் நாட்டினுடைய அரசாங்கமானது உடோப்பியா ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பினுடைய உறுப்புரை 14A இனால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் பெறுவதற்கான சுதந்திரத்திற்கு நடபடிமுறைசார் விளைவினைக் கொடுப்பதற்காக 2020 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தினை (RTI) ஆக்கியது.

இச் சட்டத்தின் பிரதான நோக்கமானது தகவல் பெறுவதற்கான உரிமைக்கு விளைவினை வழங்குவதன் மூலம் பொது அதிகாரசபைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பவற்றுக்கான ஓர் கலாச்சாரத்தை வளர்த்தல் மற்றும் அதன் மூலமாக உடோப்பியாவினுடைய மக்கள் ஊழலை எதிர்த்தல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையையும் நல்லாட்சியையும் ஊக்குவித்தல் என்பவற்றினூடாக பொது வாழ்வில் முழுமையாக ஈடுபடக்கூடிய ஓர் சமுதாயத்தினை மேம்படுத்துதல் என்பனவாகும்.

பாராளுமன்ற விவாதத்தின் போது குறித்த இவ் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் கூறியதாவது: ‘‘இம் முக்கியமான சட்டமானது நாட்டினுடைய வரி செலுத்துபவர்கள் என்ற ரீதியில் உடோப்பியாவினுடைய பிரஜைகள் அரசாங்கத்தினுடைய தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையின் சட்டபூர்வத்தன்மை தொடர்பில் கேள்வி கேட்பதற்கு ஊக்குவிக்கும். அதே வேளையில், இச் சட்டமானது பகிரங்க ஊழியர்கள் தமது சேவைகளைச் செய்கின்ற போது தாம் பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவர்கள் என்பதையும் நினைவுபடுத்தும். எனவே, இச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் பகிரங்க சேவையில் இலஞ்சத்தினைத் தோற்றுவித்தல் அல்லது பெறுதல் தொடர்பான ஏதேனும் நிகழ்வுகள் தொடர்பில் நான் கேள்விப்படுவேனா என்பதை நான் சந்தேகிக்கிறேன்.’’

இச் சட்டமூலமானது ஊழலை இல்லாதொழித்தலுக்கான தேவை மற்றும் பகிரங்க சேவைத் தீர்மானங்களை பொறுப்புடையவையாக உருவாக்குதல் போன்றவற்றை முக்கியப்படுத்துவதான பொது நிர்வாக அமைச்சினுடைய ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட குழு அறிக்கை ஒன்றினால் பிற்சேர்க்கை செய்யப்பட்டுள்ளது.

உடோப்பியாவினுடைய சுகாதார அமைச்சானது (MoH) தற்போது நிலவுகின்ற Covid-19 பெருந்தொற்றிற்கு எதிராக உடோப்பியாவினுடைய பொதுமக்களுக்கு தடுப்பூசி

செலுத்துவதற்காக ‘Cureshield’ என அழைக்கப்படும் தடுப்பூசியினை ஓர் தடுப்பூசிக்கு 5$ க்கும் அதிகமான தொகையைச் செலுத்தி சய்னா அரசிடமிருந்து இறக்குமதி செய்தது. குறித்த இதே தடுப்பூசியானது ‘சுந்தரதேஷ்’ என அழைக்கப்படும் அயல்நாட்டிற்கு குறைந்த விலையொன்றிற்கு சய்னா அரசினால் வழங்கப்பட்டிருப்பதை உடோப்பியாவினுடைய பிரஜையும் ஊடகவியலாளன் ஒருவனுமான சரத் என்பவன் வெளிப்படுத்தினான். MoH இனால் ‘Cureshield’ இறக்குமதி செய்யப்பட்டமையுடன் தொடர்புடைய பரிமாற்றத்தை விசாரித்து அவன் பல்வேறு தவகல் கோரிக்கைகளினை 2020 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க RTI சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சிற்கு அனுப்பினான். இருப்பினும், அத்தகைய தகவலை வெளியிடுதலானது RTI சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு அமைவாக சய்னா அரசுடனான உடோப்பியாவினுடைய உறவுகளுக்கு தீவிர பாதிப்பேற்படுத்துவதாக இருக்கும் அல்லது இருக்கக்கூடிய வாய்ப்புள்ளது எனக் குறிப்பிட்டு MoH அக் கோரிக்கையினை மறுத்தது.

MoH இனுடைய இத் தீர்மானத்தை சரத் நீதிமன்றில் சவாலுக்குட்படுத்த விரும்புகிறான். உடோப்பியாவினுடைய சட்டமுறைமை இலங்கையினதை ஒத்தது எனக் கருதுக. இவ் வழக்கினை வாதிடுவதற்கு பொருள்கோடலுக்கான புறவய உதவிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்பது தொடர்பில் அவனுக்கு ஆலோசனை வழங்குக. உமது ஆய்வானது தீர்க்கப்பட்ட வழக்குகளினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(50 புள்ளிகள்)

6. சிறி லான்ட் எனும் நாட்டினுடைய தலைநகரமான ரகபுர எனும் பிரதேசமானது அதன் இயற்கை அழகு மற்றும் இடவமைவு போன்றவற்றுக்காக சுற்றுலாப் பயணிகளிடையே பிரசித்தி பெற்றுள்ளது. அருண் என்பவன் ரகபுரவில் 1990ம் ஆண்டிலிருந்து இரண்டுக்கு மாடி வீடு ஒன்று மற்றும் தென்னந் தோட்டம் என்பவற்றை உள்ளடக்கியதான ஒரு ஏக்கர் காணியினை சொந்தங் கொண்டுள்ள ஓர் விவசாயி ஆவான். இவ் ஆதனத்தின் சந்தைப் பெறுமதி ஏழு மில்லியன் ஆகும். சிறி லான்டினுடைய அரசாங்கமானது மேலும் அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக ரகபுரவினுடைய உட்கட்டமைப்பினை விருத்தி செய்யத் தீர்மானித்தது. 10 மே 2021 அன்று ரகபுரவினுடைய ‘அழகுபடுத்தும் திட்டம் 2021’ இற்கான பொறுப்பதிகாரி ஒருவர் அருணுடைய வதிவிடத்திற்கு வருகை தந்ததுடன் தென்னந் தோட்டத்திலிருந்த அருணுடைய வேலையாளிடம் அவனது மொத்தக் காணியும் குறித்த அழகுபடுத்தும் திட்டத்திற்குத் தேவைப்படக் கூடும் என அறிவித்தார். 10 ஜூலை 2021 அன்று ரகபுரவினுடைய காணி சுவீகரிப்பு அதிகாரி ஒருவரான நிமலன் என்பவர் சுவீகரிப்பிற்கான அறிவித்தல் ஒன்றை அருணுடைய தென்னந் தோட்டத்திலுள்ள தென்னை மரமொன்றின் மீது இட்டார். 15 ஜூலை அன்று நிமலனால் நியமிக்கப்பட்ட இரு அதிகாரிகள் அருணுடைய காணிக்குள் புல்டோசர் ஒன்றினை ஓட்டிச் சென்றதுடன் இரண்டு மணித்தியாலங்களுக்குள் அவ் இடத்தை விட்டு வெளியேறுமாறு அவனுக்கு அறிவித்தனர். குறித்த அதிகாரிகள் அவ் இடத்தினுள் பிரவேசிப்பதை அருண் தடுத்தான். நிமலனால் அவ்விரு அதிகாரிகளுக்கும்

ஒப்படைக்கப்பட்ட அவர்களது கடமையை நிறைவேற்றுவதிலிருந்து அவர்களை தடுத்தமைக்காக ரகபுரவினுடைய பொலிஸ் அதிகாரி அருணைக் கைது செய்தார். அருண் கைது செய்யப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர் அவனது குடும்பம் அக் காணியிலிருந்து பலவந்தமாக அகற்றப்பட்டதுடன் அவனது வீடும் இடிக்கப்பட்டது.

குறித்த காணி சுவீகரிப்பு தொடர்பில் 10 ஜூலை 2021 வரையில் தான் அறிந்திருக்கவில்லை என அருண் வாதிடுகிறான்.

ரகபுரவினுடைய 1987 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 3 பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது,2

''சுவீகரிப்பிற்கான அறிவித்தலானது குறித்த பகுதியில் மேற்கொள்வதற்கு கருதியுள்ளதான வேலைகளைத் தொடங்குவதிலிருந்து ஒரு மாத காலத்திற்கு முன்பாக அப் பகுதியிலுள்ள சில எளிதில் பார்க்கக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் பகுதியானது கட்டடம் அல்லது ஏதேனும் அண்மித்த முற்றம் அல்லது தோட்டத்துடன் காணப்படுகின்ற போது அத்தகைய காணியின் உரிமையாளருக்கு குறித்த வேலைக்கு 10 நாட்களுக்கு முன்னதாகவே அறிவிக்காமல் எந்தவொரு அதிகாரியும் அத்தைகய பகுதியினுள் பிரவேசித்தலாகாது.''

தான் ஏன் குறித்த அதிகாரிகள் கடமையை நிறைவேற்றுவதிலிருந்து அவர்களைத் தடுத்தான் என்பதை விளக்குவதற்கு தனக்கு ஓர் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதனால் அருண் அவனது கைதினைச் சவாலுக்குட்படுத்த விரும்புகிறான்.

குறித்த சட்டத்தின் பிரிவு 6 குறிப்பிடுவதாவது,

''குறித்த காணியொன்று பொதுத் தேவை ஒன்றுக்கு பொருத்தமாயிருப்பதாக அமைச்சர் கருதுகின்ற போது அவர் பிரிவு 3 க்கு அமைவாக குறித்த காணியின் உரிமையாளர் அல்லது உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கும் அத்துடன் அக் காணியில் அல்லது அதற்கு அருகாமையிலுள்ள சில எளிதில் பார்க்கக்கூடிய இடங்களில் காட்சிப்படுத்துவதற்கும் என சுவீகரிப்பிற்கான அறிவித்தலொன்றை மேற்கொள்ளும்படி குறித்த காணி அமைந்துள்ள மாவட்டத்தின் சுவீகரிப்பு அதிகாரிக்கு பணித்தல் வேண்டும்.''

குறித்த சுவீகரிப்பிற்கான நட்டஈடாக ரூபா ஐம்பதாயிரத்தை டிசம்பர் 2021 இல் அருண் பெறுவான் எனவும் அத்துடன் குறித்த சுவீகரிப்பானது 'பொது நன்மை' என்பதற்காக மேற்கொள்ளப்பட்டமையால் அது நியாயமானதும் சரியானதும் என நிமலன் குறிப்பிடுகின்றார்.

''இச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் அறிவித்தல், ஒழுங்குவிதி அல்லது தீர்மானத்தின் வலிதாந் தன்மை தொடர்பில் விசாரிப்பதற்கோ அல்லது தீர்ப்பு வழங்குவதற்கோ எந்தவொரு நீதிமன்றமும் தகுதிவாய்ந்ததல்ல'' என இச் சட்டத்தின் பிரிவு 4 குறிப்பிடுகின்றமையால் குறித்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமானது கேள்விக்குட்படுத்தப்பட முடியாது எனவும் அவர் வாதிடுகின்றார்.

இவ் அதிகாரிகளின் குறித்த செயல்களின் வலிதாந் தன்மை மற்றும் சட்டத்தினூடாக பரிகாரம் பெறுவதற்கான சாத்தியப்பாடு என்பவை தொடர்பில் அருண் உமது ஆலோசனையை நாடுகிறான். நியதிச் சட்டப் பொருள்கோடலில் ஊகங்களின் பயன்பாட்டுடன் விசேடமாகத் தொடர்புறுத்தி அருணுக்கு ஆலோசனை வழங்குக. உமது விடையானது பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

சிறி லான்டினுடைய சட்ட முறைமையானது இலங்கையினதை ஒத்தது எனக் கருதுக.

(100 புள்ளிகள்)